அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 298

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
2, ஜூலை, 1985.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

சகல நடுத்தரத் தொழினுட்ப உத்தியோகத்தர்களையும் கொண்ட ஒன்றுபடுத்திய தொழினுட்பச் சேவையொன்றிற்குரிய அவசியம் பற்றி ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோக பூர்வமான குழுவின் அறிக்கையிலுள்ள விதப்புரைகளைச் செயற்படுத்துதல்

---

276-ஆம் இலக்க 31, ஒக்டோபர் 1978ஆம் தேதிய தாபனச் சுற்றுநிருபத்தையும், 407-ஆம் இலக்க 3 ஜூன் 1983ஆம் தேதிய தாபனச் சுற்றுநிருபத்தையும் நடுத்தர தொழினுட்பச் சேவையின் பிரமாணக் கோவையையும் கவனிக்கவும் (சகல நடுத்தர தொழினுட்ப உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒன்றுபடுத்திய தொழினுட்பச் சேவையொன்றிற்குரிய அவசியம் பற்றி ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோக பூர்வமான குழுவின் அறிக்கையின் 1/11-ஆம் அத்தியாயத்தின் 2.4(அ)-ஆம் பிரிவு)

02. நடுத்தர தொழினுட்பச் சேவையின் பிரமாணக் குறிப்பின் 2.4(அ)-ஆம் பிரிவு பின்வரும் பிரிவைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகிறது.

..3

"2.4 (அ) பதவியணியின் 90% வீதம் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரண தரம்) ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு அதிகப்படாதவாறு மொழி அல்லது இலக்கியம், கணிதம் என்பவற்றோடு குறிப்பிட்ட இரண்டு விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தவர்களை

அல்லது

11. கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரணதரம்) ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு அதிகப்படாதவாறு மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் என்பவற்றோடு வேறு ஒரு பாடத்திலும் சிறப்புச் சித்தியடைந்தவர்களை

அல்லது

111. தேசியப் பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையில் முதல் மொழி எண்கணிதம், விஞ்ஞானம் என்பவற்றுடன் மேலும் ஒரு பாடத்தில் "பி" தரத்துச் சித்திகளுடன் இரண்டு அமர்வுகளுக்கு அதிகப்படாதவாறு ஆறு பாடங்களில் சித்தியடைந்வர்க

ளையும்/அல்லது

1V. அங்கீகரிக்கப்பட்ட தொழினுட்ப நிறுவனமொன்றில் குறிப்பிட்ட கல்வி நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் நிரப்பப்படும்.

குறிப்பு: (11), (111)-ஆம் பிரிவுகளின் கீழ் தகைமை பெறும் பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட பதவியுடன் சம்பந்தமுடையதென உரிய அமைச்சினால் /திணைக்களத்தினால் விதிக்கப்படும் விஞ்ஞான பாடம்/பாடங்களில் திணைக்கள ரீதியான பரீட்சையொன்றுக்கும் தோற்றுதல் வேண்டும்.

03. இதன் பிரகாரம் நடுத்தரத் தொழினுட்பச் சேவையிலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திட்டங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்: எம். என். ஜுனைட்
தாபனப் பணிப்பாளர்.